# சிவலிங்க வழிபாடு

G. M. முத்துச்சாமி
தமிழ்நாடு

**தோற்றுவாய்**

பழங்காலம் முதற்கொண்டு பாரத மக்கள் அமைத்துப் போற்றி வந்திருக்கும் செல்வங்களில் ஆலயம் தலை சிறந்ததாகவுள்ளது. ஆலயங்களை அமைப்பதைப் பற்றியும் அவற்றில் தெய்வ உருவங்களை நிலைநாட்டுவது பற்றியும் பல்வேறு விதிமுறைகளை ஆகமங்கள் வகுத்துத் தந்துள்ளன. இதே நிலையில் ஆலயங்களில் ஆண்டவனின் அருளை நிலைப்படுத்துவதற்காகத் தேவைப்படும் மந்திரங்களை வேதங்கள் அளித்துள்ளன. மேலும், கல்விக் களஞ்சியங்களாகவும், இயல் இசை நாடகசாலைகளாகவும், பலவகைக் கலைகளின் கவின்மிகு கூடங்களாகவும், ஆதரவற்றவர்களுக்கு ஆக்கம் தேடித் தரும் அரும் பெருங் கருவூலங்களாகவும் கோயில்கள் மக்கள் நலனைப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளன. இவற்றிற்கெல்லாம் மேலாக. மக்கள் தங்கள் வாழ்நாள்களை உலகியல் சூழ்நிலைகளிலே வீண் நாள்களாகக் கழித்து விடாமல், புனித வாழ்க்கை வளத்தில் வளர்ச்சி பெறுவதற்கான வழிமுறைகளை எல்லாம் கோயில்கள் ' வகுத்துள்ளன. இந்தப் பேருண்மைகளை எடுத்துக்காட்டுவார் போன்று சிவபெருமான் திருக்கோயில்களில் தலையாய தெய்வமாகத் திகழ்ந்து வந்துள்ளார். இத்தகைய சிறப்புக்குக் காரணம் அவர், மும்மூர்த்திகளாகிய பிரமன், திருமால், உருத்திரன் ஆகியோர்களுள் ஒருவராக இருந்து விடாமல், அவர்களுக்கும் மேல்நிலையில் அவர்களை இயக்குபவராகிய மேன்மை மிக்க கடவுளாவார் (அல்லது) கடவுளாகத் திகழ்வதே!

**சிவலிங்கம்**

சிவபெருமானுக்கு உருவமோ பெயரோ இல்லை என்றாலும், அடியார்களுக்குக் கருணை புரியும் முறையிலும், இவ்வுலகினரைத் திருத்தும் முறையிலும் அவர் எத்தகைய உருவத்தையும் தாங்கி அவ்வுருவ நிலையில் காட்சியளிக்க வல்லவராக உள்ளார். நடராசர், சந்திரசேகர் போன்ற வடிவங்கள் அவரது உருவத்தை உணர்த்துவன. அவரது உருவம் இல்லாத அருவத்தையும், உருவத்தையும் உணர்த்துவது சிவலிங்கமாகும். கண்ணால் காண முடியாத அருவத்தையும் கண்ணால் காணத் தகுதியுள்ள உருவத்தையும் ஒரே சமயத்தில் ஒரே அமைப்பில் காட்டும் அடையாளம் சிவலிங்கம் என்பதை,

''காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாம்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்''

எனச் சேக்கிழார் சாக்கிய நாயனார் புராணத்தில் குறிப்பிடுகிறார்.

**சிவலிங்க விளக்கம்**

சிவலிங்கம் என்னும் சொற்றொடர் தெரிவித்தல் என்னும் பொருளைக் கொண்ட ''லிக்'' என்பதிலிருந்து வந்ததாகவும், ஒவ்வொரு பொருளும் சிவபெருமானிடமிருந்து தோன்றுவதையும், பின்னால் அவை அவரிடம் ஐக்கியம் ஆவதையும் சிவலிங்கம் காட்டுவதாகவும் சிலர் கருதுவதுண்டு. சிவலிங்கத்தின் உள் அமைப்பும் வெளியமைப்பும் ஓம் என்னும் பிரணவ மந்திரத்தையும் குறிப்பதாகத் திருமூலர்,

இலிங்க நற்பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்க நற்கண்டம் நிறையும் அகாரம்,
இலிங்க துள்வட்டம் நிறையும் உகாரம்
இலிங்க மகாரம் நிறைவித்து நாதமே.

எனத் தெரிவிக்கின்றார். மேலும் ஓம் என்னும் பிரணவ மந்திரத்திலுள்ள அ. உ. ம. என்னும் மூன்று எழுத்துகளோடு வரிவடிவாகிய விந்தும் ஒலிவடிவாகிய நாதமும் சேர்ந்து ஐந்தாகின்றன எனப் பஞ்சாட்சர விளக்கம் கூறுகிறது. ''ஓங்காரமாம் ஐந்தெழுத்தால் புவனத்தை உண்டு பண்ணி'' எனக் காட்டுகிறார் தாயுமானவர். சிவலிங்கத்தின் அடிப்பாகம் படைக்கும் தெய்வமாகிய பிரமனுக்கு உரியது என்றும், இரண்டாம் பாகம் அல்லது நடுப்பாகம் எட்டுப் பாகங்களைக் கொண்டதாய் இவ்வகையில் எட்டுச் சக்திகளையும் மற்றும் மேலும் ஒரு சக்தியாகிய ஒன்பதாம் சக்தியையும் சேர்த்து நவசக்திகளாய்த், திருமாலாகிய காக்கும் தெய்வத்திற்கு உரியது என்றும், மேலுச்சிப் பாகம் பெருங்கருணைப் பேராளராகிய சிவபெருமானுக்கு உரியது என்றும் காட்டப் பெறுகிறது.

**புராணங்கள் போற்றும் சிவலிங்கம்**

புராணங்கள் காஞ்சிபுரத்தில் உமையம்மையார் மூல லிங்க வடிவில் சிவலிங்க வழிபாடு செய்ததாகவும், திருமாலும் பிரமனும் திருவண்ணாமலையில் சிவலிங்க வழிபாடு செய்ததாகவும், கணேசர் முகாசூரனை வென்ற பின்னர் தஞ்சை மாவட்டத்துத் திருச்செங்காட்டங்குடியில் சிவலிங்க வழிபாடு நிகழ்த்தியதாகவும், முருகப் பெருமான் சூரபதுமன் முதலியோரை வென்றபின்

திருச்செந்தூரில் இத்தகையதொரு வழிபாடு இயற்றியதாகவும், இராவணனை வென்ற பின்னர் இராமர் இராமேசுவரத்தில் சிவலிங்க பூசை நடத்தியதாகவும் கூறுகின்றன. இராவணன் தாம்

சென்றவிடத்திற்கெல்லாம் ஆங்காங்கு எப்போதுமே வழிபடுவதற்காகப் பொன் லிங்கம் ஒன்றை உடன் கொண்டு சென்று வழிபாடு செய்யும் வழக்கம் கொண்டிருந்தான் என இராமாயணத்தின் உத்தரகாண்டம் கூறுகிறது.

**பிற சிவலிங்கங்கள்**

கோயிலின் கோபுரம், கோயில் கொடி, கோயிலின் கருவறை ஆகியவையும் சிவலிங்கங்களாக வழிபடத்தக்கன. பல உலோகங்களினாலும் பல பொருள்களினாலும் செய்யப்பெறும் சிவலிங்கங்கள், பொன் லிங்கம், வெள்ளி லிங்கம், மரகத லிங்கம், வெண்கல லிங்கம், ஸ்படிக லிங்கம், கோமத லிங்கம், தாவர லிங்கம் போன்று உள்ளன. குணங்களையும் ஆற்றல்களையும் கொண்டுள்ள சிவலிங்கம் பல உள்ளன. அழகு வடிவினது சொக்கலிங்கம் அல்லது சுந்தரலிங்கம், நோய் நீக்க உதவுவது வைத்தியலிங்கம், இறப்பைத் தடுத்து நிரந்தரத்துவத்தை அளிப்பது அமிர்தலிங்கம், நாக மரத்துப் பூவில், ஐந்து தலை நாகம் படம் எடுத்து நிழல் தருகிற நிலையில், அதில் சிவலிங்க வடிவும் தெளிவாகக் காணப்படுவது வியப்பை ஊட்டுவதாக உள்ளது.

நன்றி: லாருட் அருள்மிகு தண்டாயுதபாணி கோவில்
திருக்குடநீராட்டுவிழா மலர்

